**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**2025** ம் ஆண்டு **நவம்பர்** திங்கள் **24** ஆம் நாள் **திங்கள்**கிழமை

IA.No.16/2025 in OS.No.106/2014

கே.ஆர்.கண்ணன் ... மனுதாரர்/வாதி

–எதிர்–

1) ஆர்.கிருஷ்ணம்மாள் (இறப்பு)
2) சாந்தி
3) ரேணுகா
4) கே.கிருஷ்ணமூர்த்தி
5) வி.ஜி.கணேசன்
6) மெசர்ஸ் விநாயகா பயர் ஒர்க்ஸ் பேக்டரி
அதன் பங்குதாரர் ரா.பிரம்மன் மூலம்
7) S.V.S.P.மாணிக்கராஜா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 23.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பார்த்தசாரதி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சங்கர்குமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.முத்துக்குமார், B.L., அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.காளிதாஸ், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.லட்சுமிநரசிம்மன், M.Com., M.L., அவர்கள் முன்னிலையாகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா மனுவிற்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்று தாவா மனுவில் கடந்த 02.09.2025 அன்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுவில் கண்ட சொத்துவிவரத்தில் கூடுதலாக மனுவில் கண்ட சொத்தையும் வழக்குரையில் சேர்த்து கொள்ள ஏதுவாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க கோரியும் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) மனுவின் சுருக்கம்

பிராது 1 முதல் 23 லக்க சொத்துக்களில் சட்டப்படியான மனுதாரர் பங்குரிமையை நிர்ணயித்து பிரித்து தர வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா 24 மற்றும் 25 லக்கச் சொத்துக்களை வழக்குரையில் சேர்க்க 3ம்பிரதிவாதி மனுச் செய்து. அதன் பேரில் அச்சொத்துக்களும் வழக்குரையில் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கண்ட 24 மற்றும் 25 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து, மனுதாரரின் தகப்பனார் மனுதாருக்கு கடந்த 06-10-2006ம் தேதியிட்டு தானபத்திரத்தின் மூலம் உரிமை அளித்துள்ளார். மேற்படி தானப்பத்திரத்தின்படி இச்சொத்துக்களில் மனுதாரருக்குண்டான பாக உரிமை சம்பந்தமாக இத்தானப்பத்திரம் மூலம் மனுதாருக்கு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதில் இச்சொத்துக்களில் மனுதாரரின் தகப்பனாருக்குண்டான பாக உரிமைகள் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதாகும். இதுதவிர்த்து விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, ஏ.இராமலிங்காபுரம் கிராமத்தில் செயல்படும் கனரா வங்கி கிளையில் மனுதாரரின் தகப்பனார் காலம் சென்ற என்.கே.இராதாகிருஷ்ணன் நகைகளை அவர்கள் பொதுக்குடும்ப பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட செலவினங்களுக்காக மேற்கண்ட வங்கியில் கடன் பெற்றுள்ளார். மேற்கண்ட கடனை தகப்பனார் இறப்பிற்கு பிற்பாடு மனுதாருக்கு எவ்வித அறிவிப்புமின்றி இந்த நம்பர் 1 முதல் 3 வரை பிரதிவாதிகளும், 3ம்பிரதிவாதியின் கணவர் மகேந்திரகுப்புசாமி ஆகியோர் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி நகைகளை மீட்பதற்கு நடவடிக்கை செய்து, இதுவிவரம் அறிந்த மனுதாரர் சம்பந்தப்பட்ட வங்கிக்கு ஆட்சேபனை மனு கொடுத்து வங்கி அதிகாரிகளும் இதுவிவரம் அறிந்து மோசடியாக நகைகளை மீட்க வந்த 1 முதல் 3 பிரதிவாதிகளையும், மேற்படி மகேந்திரகுப்புசாமியையும் எச்சரித்து அனுப்பிவிட்டனர். அதனையடுத்து மேற்படி வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நகைகளை பொறுத்தும் பாக உரிமை கோரி பெற மனுதாரரது உரிமையை பதிவு செய்து, இவ்விதம் அடமானத்தில் உள்ள பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நகை விவரங்களை தரக்கோரி வங்கியில் மனு செய்து, வங்கியால் இதுபற்றிய விவரங்கள் ஏதும் மனுதாருக்கு தற்பொழுது எழுத்துமூலமாக இதுகாலம் கொடுக்கப்படவில்லை. பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நகைகள் பாகத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய நகைகளையும், வழக்குரையில் சேர்க்க வேண்டி மனுதாரர் சட்டப்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார். இவ்விதம் பாகத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய மனுவில் வழக்கில் நகைகள் பற்றிய விவரங்கள் இத்துடன் தாக்கல் துலக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நகைகளையும் பாக சொத்துக்களில் ஒன்றாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையேல் மனுதாரர் முன்னிட்டுள்ள வழக்கும் பகுதி பாகம் கோருதல் என்ற அடிப்படையில் நிரகரிக்கக்கூடிய சட்ட நிலை உள்ளது. இத்தகைய அடமானத்தில் உள்ள பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நகைகள் என்பதனை மறுத்து எதிர்வாதம் செய்யும் 2, 3 பிரதிவாதிகள் யாதொரு ஆட்சேபனையும் இதுகாலம் எழுப்பவில்லை. அந்தவகையில் இத்துடன் தாக்கல் மனுவில் கண்ட விவரப்படி வழக்குரையில் சொத்துவிவரத்தில் கண்டுள்ள நகை விபரங்களை கூடுதல் சொத்துக்களாக சேர்த்து கொள்ள வேண்டியது மிகவும்

அவசியமாக இருக்கிறது. இவ்விதம் சேர்ப்பதால் எதிர்வாதம் செய்யும் பிரதிவாதிகளுக்கு யாதொரு prejudice ம் ஏற்படக்கூடியதில்லை. எனவே மனுவில் கண்ட சொத்துவிவரத்தில் கூடுதலாக மனுவில் கண்ட சொத்தையும் வழக்குரையில் சேர்த்து கொள்ள ஏதுவாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க கோரியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்**

இந்நிலையில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, A.இராமலிங்காபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் கனரா வங்கி கிளையில் வாதி, 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் லேட்.N.K.ராதாகிருஷ்ணன் பொதுக்குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட தாவா மனுவில் கண்ட நகைகளை அடமானம் வைத்தார் என்பது உண்மையென ஒப்புக் கொள்ளப்படுகிறது. அவை பொதுக்குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட நகைகள் ஆகும். இந்நிலையில் வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் N.K.ராதாகிருஷ்ணன் அவரது உடல்நிலைக் குறைவு ஏற்பட்டபோது வைத்தியம் பார்ப்பதற்காக தாவா மனுவில் கண்ட நகைகளை மேற்படி A.இராமலிங்காபுரம் கனரா வங்கியில் அடமானம் வைத்தார். அதன்பிறகு ஷை ராதாகிருஷ்ணன் அவர்கள் தான் உயிருடன் இருந்த காலத்தில் ஷை அடகு நகைகளை திருப்பாமலேயே காலமாகிவிட்டார். மனுதாரர்/வாதி 06-10-2006 ம் தேதி பொதுக்குடும்பத்திலிருந்து விலகி ஷை தேதியில் அவரது தகப்பனாரான N.K.ராதாகிருஷ்ணனுக்கு ஒரு பதிவு செய்யப்படாத பொதுப்பாகப் பாத்திய விடுதலைப் பத்திரமும், மேலும் அவரது தாயாரான 1ம் பிரதிவாதி லேட்கிருஷ்ணம்மாள் அவர்களுக்கு 18-09-2006 ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரமும் எழுதிக் கொடுத்துவிட்டார். அவ்வாறு மனுதாரர்/வாதி பொதுக்குடும்பத்திலிருந்து விலகி தனியாக சென்றபிறகு பொதுக்குடும்பச் சொத்தான பிராது தபசில் கண்ட சொத்துக்களிலோ, மற்றும் தாவா மனுவில் கண்ட A.இராமலிங்காபுரம் கனரா வங்கியில் அடகு வைத்துள்ள நகைகளிலோ எந்தவித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல. மேலும் தாவா அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும்போது வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் தாயார் கிருஷ்ணம்மாள் இறந்துவிட்டதாலும், மேலும் பொதுக்குடும்பத்திலிருந்து மனுதாரர்/வாதியும் விலகிவிட்டதாலும் தாவா மனுவில் கண்ட நகைகளில் 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு 1/2 பாகமும், 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு 1/2 பாகமும் கிடைக்கத்தக்கதாகும். அதில் மனுதாரர்/வாதிக்கு 5/12 பாகமோ, 1/3 பாகமோ வேறு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல. ஆகவே மனுதாரர்/வாதிக்கு தாவா பிராது தபசில் கண்ட சொத்துக்களிலோ, தாவா மனுவில் கண்ட நகைகளிலோ எந்தவித சம்பந்தமும் கிடையாது. ஷை உண்மைச் சங்கதிகளுக்கு மாறாக ஏதோ மனுதாரர்/வாதி தாவா மனுவில் கண்ட பொதுக்குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட நகைகளில் பாகம் கோரி மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மேலும் தாவா மனுவில் கண்ட தபசில் நகைகளை பிராது சொத்து விவரத்தில் 26 வது சொத்தாக கூடுதல் சொத்தாக சேர்க்க உத்தரவிடும்பட்சத்தில் அது குறித்து இந்நிர் 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி ஒரு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்

உரிமையை கேட்டுக் கொள்கிறார்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்படும் எதிர் உரையின் சுருக்கம்**

மனுவில் கண்ட சொத்தினை அசல் வழக்கில் கூடுதல் சொத்தாக சேர்க்க வேண்டுமென மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது பொய்யானதும் மோசடியானதும் ஆகும். மனுவில் கேட்கப்பட்டுள்ள பரிகாரங்களைப் பெற மனுதாரருக்கு எந்த பாத்தியமும் இல்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், A. ராமலிங்காபுரம் கிராமத்தில் செயல்படும் கனரா வங்கி கிளையில் 3 ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான காலம் சென்ற N.K.ராதா கிருஷ்ணன் அடகு வைத்த நகைகள் பொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்று மனுதாரர் உரிமை கோருவது சட்டத்திற்கும் உண்மைக்கும் எதிரானதாகும். அந்த நகைகள் இந்த 3 ம் எதிர்மனுதாரரின் சொந்த நகைகள் ஆகும். 3 ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான N.K. ராதாகிருஷ்ணன் அவரது கடைசி காலத்தில் நோய் வாய்ப்பட்டு மருத்துவ 3 ம் எதிர்மனுதாரரின் சிகிச்சை பெற்று வந்தார் என்று 3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரையில் கூறப்பட்டுள்ளது. விரிவாக வழக்குரையில் பெற்றோர்களை அவர்களது கடைசி காலத்தில் இந்த மனுதாரர் முற்றிலுமாக புறக்கணித்துவிட்டார். 3 ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் இந்த 3 ம் எதிர்மனுதாரரின் பராமரிப்பிலேயே இருந்து வந்தார்கள். 3 ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரின் மருத்துவ செலவிற்கு 3 ம் எதிர்மனுதாரரே தன் சொந்த பணத்தை செலவு செய்துள்ளார். 3 ம் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு திடீரென மருத்துவ செலவிற்கு பணம் தேவைப்பட்ட சூழ்நிலையில் 3 ம் எதிர்மனுதாரரின் நகைகளை அவரது தகப்பனாரின் பெயரில் A. ராமலிங்காபுரம் கிராமத்தில் செயல்படும் கனரா வங்கியில் அடகு வைத்து கடன் பெறப்பட்டது. அந்த வங்கியில் அப்போது இந்த 3 ம் எதிர்மனுதாரருக்கு கணக்கு இல்லாத காரணத்தாலும் அவரது தகப்பனாரின் பேரில் வங்கி கணக்கு இருந்த காரணத்தாலும் எதிர்மனுதாரருக்கு சொந்தமான நகைகளை அவரது தகப்பனார் பெயரில் அவ்வாறு அடகு வைத்து பெறப்பட்ட கடன் அடகு வைக்கப்பட்டது. தொகையை 3 ம் எதிர்மனுதாரரே தன் சொந்த பணத்தை செலுத்தி கடனை தீர்த்துள்ளார். 3 ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் காலமான பின் வங்கியில் அவரது பெயரில் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகளை மீட்க 3 ம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே உரிமை உள்ளது. அதில் மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை. அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த எதிர்மனுதாரர் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரரது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்உரையின் சுருக்கம்**

எதிர்மனுதாரர் எதிர்வழக்கு தாக்கல் செய்து 10 வருடங்களுக்கு பின்னர் வழக்குரையை சீர்திருத்தம் செய்ய மனு செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடியதல்ல. எனவே மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த 3 வருடத்திற்குள் மனு தாக்கல் செய்யாமல் காலம்கடந்து இந்த மனுவினை தாக்கல்

செய்துள்ளார். மனுதாரர் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் பொய்யான விவரங்களை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டுமாய் 4ம்எதிர்மனுதார் பக்கம் வணக்கமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

**6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் மனுதாரர்/வாதி சீர்திருத்த மனுவில் கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவில் போதுமான மற்றும் நியாயமான காரணங்கள் (Sufficient cause is not given எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்ற காரணத்திற்காகவே சீர்திருத்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரம் மற்றும் நற்கூறுகள் (No Merits) எதுவும் இல்லை என்ற காரணத்திற்காகவே சீர்திருத்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அசல் வழக்கினை கடந்த 2014ம் வருடம் தாக்கல் செய்து பல ஆண்டுகள் கழித்து அதாவது 12 ஆண்டுகள் கடந்த பின்பு தற்போது பொய்யான காரணங்களைக் கூறி சீர்திருத்தம் செய்ய கோருவது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேலும் தாவர மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தாவா மனுவை 6ம் எதிர்மனுதாரர் /6ம் பிரதிவாதி பக்க கூடுதல் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

(1) இம்மனு அனுமதிக்கக் கூடியதா?

(2) மனுதாரருக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

7) **தீர்வு**

(7–i) இம்மனுவானதை மனுதாரர்/வாதியால், மனுவில் கண்ட சொத்து விபரத்தில் கூடுதலாக மனுவில் கண்ட சொத்தையும் வழக்குரையில் சேர்த்துக்கொள்ள ஏதுவாக

தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கக் கோரியும் வகுமுறை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டும், ஷை மனு உரைக்கு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மேற்கண்ட வகையில், எதிர்உரையும் தாக்கல் செய்யப்பட்டும், மனு வாதுரை சமயத்தில், மனுவில் கண்ட சங்கதிகளை மனுதாரர் தரப்பில் முன்நிறுத்தி வாதுரை செய்யப்பட்டது. அதுபோல, எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரையில் சொல்லிய சங்கதிகளை முன்நிறுத்தி வாதுரை செய்யப்பட்டது.

(7–ii) இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியானது மனுதாரர்/வாதியால் பிராதில் காண்பிக்கப்பட்ட சொத்தின் பேரில் தனக்கு 5/12 பங்கு பாகம் பிரித்து தர வேண்டி கடந்த 2014 ஆம் ஆண்டு அசல் வழக்கை தாக்கல் செய்து கொண்டும் ஷை வழக்கிற்கு 2ம் எதிர்வாதியானவர் பிராது 1 முதல் 10 தபசில் சொத்தில் தனக்கு 4/9 பங்கு பாகமும், பிராது 11 லக்க சொத்தில் தனக்கு 4/9 பங்கு பாகமும் உள்ளதாகவும் எதிர்பாத்திய கோருரிமையை எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் உள்ள மற்ற எதிர்வாதிகளும், எதிர்வழக்குரைகளை தாக்கல் செய்து கொண்டும் பல்வேறு இடை மனுக்களை தாக்கல் செய்து கொள்ளப்பட்டும், பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ளப்பட்டும், வழக்கு நிலுவையில் உள்ள பொழுது 1ம் எதிர்வாதி இறந்து போய்விடவே அவரது வாரிசுதாரர்களையும் சேர்த்து கொள்ளப்பட்டும் எழுவினாக்கள், கூடுதல் எழுவினாகள் வனையப்பட்டும், கடந்த 2014 முதல் தொடர்ந்து நிலுவையில் இருந்து வந்தும் கடந்த 05.08.2025 ஆம் தேதியில் இவ்வழக்கானது விசாரணை பட்டியலிடப்பட்டும், அன்றைய தேதியில் மனுதாரர்/வாதியானவர் தரப்பில் இம்மனுவானதை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(7–iii) மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் சொல்லியுள்ள நகைகள் பொறுத்து பிராது சொத்து விபரத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளுக்கு பின்பு மனுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை மனுவில் சொல்லப்பட்ட நகைகளை பொறுத்து காலம் சென்ற என்.கே.இராதாகிருஷ்ணன் என்பவரால் அடமானம் வைக்கப்பட்டிருந்தது என்பதை பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்படவில்லை. ஷை நகைகள் பொதுவில் பாத்தியப்பட்டது என்று

மனுதாரர் சொல்லும் பொழுது, அதில் மனுதாரர்கள் பாகம் உரிமை என்றளவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டதாக உள்ளது. எனவே மனுவில் சொல்லப்பட்ட நகைகள் பொறுத்து அசல் வழக்கானது, பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பொதுவாக, பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யும் வழக்கில், அனைத்து சொத்துக்களையும் அனைத்து தரப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சட்டரீதியாக இருந்து வருகின்ற படியாலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம், மாண்புமிகு உயர்நீதிமன்றமும் பல்வேறு வழக்குகளில் தீர்ப்புரைகளில் சொல்லப்பட்ட ஒன்றாக இருந்து வருகின்ற நிலையில், எதிர்மனுதாரர்களுக்கு பாதக மன்னியில், இம்மனுவும் அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே பல்வேறு வழக்குகள், பல்வேறு பிரச்சனைகள் என்பதை தவிர்க்கும் பொருட்டும் இம்மனுவை பொறுத்து அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களுக்கு கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யவும் இந்நீதிமன்றம் அனுமதியளித்தும், அசல் வழக்கில் விசாரணையின் பொழுது, தீர்மானித்து கொள்ள வேண்டியது என்றும் இந்நீதிமன்றம் கருதியும், இம்மனுவை அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்று தீர்மானித்து பிரச்சனை எண் 1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI

Digitally signed by T V MANI
Date: 2025.11.24 17:11:22 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI
Date: 2025.11.24 17:11:29 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.16/2025 in OS.No.106/2014
**உத்தரவு நாள் – 24.11.2025**

IA.No.16/2025 in OS.No.106/2014, **உத்தரவு நாள் – 24.11.2025**

**Orders is pronounced. As a result. this petition is allowed No costs.**